நீர்ப்பாசன அமைச்சு

நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவ சர்வதேச பயிற்சி நிறுவனம் கொத்மலை

**நீர்ப்பாசன தொழில்நுட்பவியல் தொடர்பான டிப்ளோமா பாடநெறி**

**2020 (2ஆம் பயிலுநர்கள் ஆட்சேர்ப்பு)**

கொத்மலை, நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவ சர்வதேச பயிற்சி நிறுவனமானது மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கீழ் தேசிய தொழிற் தகைமை 06ம் தரத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட ஒரு முழுமையான அரச நிறுவனமாகும். இவ் நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் மூன்று வருட கால முழுநேர நீர்ப்பாசன தொழில்நுட்பவியல் தொடர்பான டிப்ளோமா பாடநெறிக்கு தகைமை உள்ள இலங்கை விவாகமாகாத அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. பயிலுநர்களை சேர்த்துக்கொள்ளல்:**

(அ) ஆகக்குறைந்த தகைமைகள்

1) விண்ணப்பதாரர் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 26 வயதிற்கு குறைந்தவராகவும் சிறந்த உடல் உள மற்றும் ஆரோக்கியம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.
2) க.பொ.த (சா.த) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ், ஆங்கிலம், கணிதம் மற்றும் விஞ்ஞானம் உட்பட ஆறு பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
3) க.பொ.த (உ.த) பரீட்சையில் கணிதப் பிரிவில் மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**2. பயிற்சிக்காக சேர்த்துக்கொள்ளும் முறைகள்:**

நீர்ப்பாசன தொழில்நுட்பவியல் தொடர்பான டிப்ளோமா பாடநெறிக்கு 30-40 வரையான பயிலுநர்களை சேர்த்துக்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ள தகைமைகளிற்கு மேலதிகமாக பயிலுநர்களை சேர்த்துக்கொள்ளப்படும் விதிமுறைகள் பின்வருமாறு

1) தகைமை பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள் கணிதம் மற்றும் புத்திப் பரீட்சையில் தோற்றுதல் வேண்டும். வினாப்பத்திரம் ஒன்றிற்கு விடை எழுதுவதற்கான காலம் ஒரு மணித்தியாலமாகும்.
2) எழுத்துப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரர்கள், நேர்முகப் பரீட்சையொன்றிற்கு தோற்றுதல் வேண்டும். அத்துடன் நேர்முகப் பரீட்சையில் கல்வித் தகைமைகளிற்கு மேலதிகமாக உடலியல், உளவியல் தகைமைகள் மற்றும் குறித்த துறையில் உள்ள ஆர்வம் மதிப்பீடு செய்யப்படும்.
3) எழுத்துப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சையில் கூடிய புள்ளிகளை பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரர்கள் டிப்ளோமா பாடநெறிக்கு தெரிவு செய்யப்படுவர்.

**3. விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் விபரங்கள்:**

1) நிறுவனத்தின் இணையத்தளத்தில் விண்ணப்பங்கள் பதிவு இறக்கம் செய்யப்படல் வேண்டும். (www.kitiiwm.gov.lk).
2) விண்ணப்பங்கள் ஆங்கில மொழியில் பூரணப்படுத்தப்பட்டு பதிவுத்தபாலில் நிறுவனத்தலைவருக்கு அனுப்பப்படல் வேண்டும்.
3) இவை தொடர்பான மேலதிக தகவல்களை 081-2356372 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக திருமதி அநூசா துனுதிலக இடம் பெற்றுக்கொள்ளலாம்.
4) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி **2020 நவம்பர் (கார்த்திகை) 20** ஆகும்.
5) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் (9'' x 4'') தபாலுறையில் நிறுவனத்தலைவர், நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவ சர்வதேச பயிற்சி நிறுவனம் - கொத்மலை, ரிவர்சைட், மாவத்துர எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''நீர்ப்பாசன தொழில்நுட்பவியல் தொடர்பான டிப்ளோமா பாடநெறி'' என தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

**4. நிபந்தனைகள்:**

1) பயிற்சி நெறியானது ஆங்கில மொழியில் நடாத்தப்படும்.
2) இப்பயிற்சி நெறியின் கல்வி நடவடிக்கைகளிற்கான அனைத்து செலவினங்களும் இலங்கை அரசு பொறுப்பு ஏற்பதுடன் விடுதி வசதிகள் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும். எனினும் பயிற்சி காலத்தில் உணவு பானங்கள், பௌதீக மற்றும் ஏனைய செலவினங்கள் பயிலுநர்கள் பொறுப்பேற்க வேண்டும்.
3) தேர்ந்தெடுக்கப்படும் பயிலுநர்கள் பயிற்சி நிறுவனத்தின் ஒழுக்கம் மற்றும் விழுமியங்களுக்கு அமைவாக பயிற்சியை பூரணப்படுத்துவதாகவும், பயிற்சி காலத்தை சித்திகரமானதாக நிறைவு செய்வதாகவும் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடல் வேண்டும்.
4) பயிற்சி காலத்தைப் பூரணப்படுத்துவதற்கு முன்னர் பயிற்சியிலிருந்து விலகிக் கொள்வதாயின் அன்றைய தினம் வரை அவர்களுக்காக அரசினால் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களை மீளச் செலுத்துவதற்கு கடமைப்பட்டிருப்பதுடன் அதற்கான பிணை ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடல் வேண்டும்.
5) பயிற்சி காலத்தில் நடாத்தப்படும் அரையாண்டு, வருடாந்த மற்றும் பயிற்சி கால முடிவில் நடாத்தப்படும் இறுதி எழுத்து மற்றும் செய்முறைப் பரீட்சையில் சித்தியடையும் பயிலுநர்களுக்கு NVQ Level -6 தரத்தில் டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படுவதுடன், பயிற்சி தொடர்பான தொழில் பெற்றுக்கொடுப்பதற்கு இவ் அமைச்சு மற்றும் பயிற்சி நிறுவனம் பொறுப்பேற்காது.
6) விண்ணப்பதாரர்கள் வேறு ஏதேனும் பாட நெறிகளுக்காக பதிவு செய்யப்பட்டிருத்தல் கூடாது.

**திரு. அனுர திசாநாயக்க**
**செயலாளர்**
**நீர்ப்பாசன அமைச்சு**